15/6/017

# Praise the Lord

## இஸ்ரயேல் புனிதப் பயணம் : மே - 2017

எனது நீண்ட நாளையக் கனவு நனவானது என்பதற்காக முதலில் இறைவன் இயேசுவுக்கு கோடான கோடி நன்றி.

எங்கள் குழுவில் குழுத் தலைவரையும் சேர்த்து 40 பேர் சென்றோம். எங்கள் குழுவை வழிநடத்திய சகோதரர் என்பதைவிட எனது மகனாகத் தான் பார்த்தேன் காரணம் அன்பொழுக என்னை அம்மா என்று அழைத்தவிதம். மகனின் பெயர் A. ஜோசப் பெலிக்ஸ் - திண்டிவனம். மிகவும் அன்புள்ளவர். பொறுமையின் சிகரம். அவர் இந்த ஆண்டோடு தொடர்ந்து 10 ஆண்டுகள் இந்த புனித பயணத்தை வழிநடத்தி வருகிறார். எங்களது குழுவில், சென்ற ஆண்டு இந்த பயணத்தில் கலந்து கொண்டவர்களும் 2-ம் முறையாகக் கலந்து கொண்டார்கள் என்றால் அவர்மீது எவ்வளவு நம்பிக்கை. ஏன் ஒரு தாத்தா மதுரையிலிருந்து 3ம் முறையாக மூன்று முறையும் இவரது குழுவில் கலந்து கொண்டார்கள். குடும்பம் குடும்பமாகவும், தனியாகவும் என்னைப் போல் கலந்து கொண்டார்கள். தனியே சென்றிருந்த போதும் தனிமையை உணராத அளவுக்கு இவரும் குழுவில் வந்த அனைவருமே எனக்கு இறைவன் அனுப்பி வைத்த தூதர்களாகத் தான் பார்த்தேன். எல்லா விதத்திலும் குறிப்பாக எனது Luggage எடுத்துச் செல்ல உதவினார்கள். அருட்தந்தை - ஆரோக்கியசாமி வருவதாக இல்லை. கடைசி வேளையில் கலந்து கொள்ள இறைவன் வாய்ப்பளித்தார். தந்தை மிகவும் எளியவர். விவிலியத்தை விளக்கி வந்த விதம் எப்படியாவது இந்த 10 நாட்களின் முடிந்த அளவு விவிலியத்தை விளக்கி மக்களுக்கு அளித்திட வேண்டும் என்று மிகுந்த உற்சாகத்துடன் எங்களை வழிநடத்தி வந்தார்கள் தினமும் திருப்பலி எத்தனை நன்றி பலிகளையும், எவ்வளவு பேருக்காகவும் செய்கிறேன். பணம் ஒரு பொருட்டல்ல என்று கூறி உற்சாகத்தோடு திருப்பலி நிறைவேற்றி தினமும் ஏராளமான அருள் வரங்களை இறைவனிடமிருந்து பெற்றுத் தந்தார்கள்.

பயணம் ஆரம்பித்த வேளையிலிருந்து (சென்னை)

விமானத்தில் பறக்கும் போதும் குழுத் தலைவர் மிகுந்த அக்கறை யுடனும், பொறுப்புடனும் செயல்பட்டார். எல்லாம் திட்டமிட்டபடி நடந்தது. பேருந்து (குளிர்சாதனம்) AC Bus. ஆங்காங்கே வந்திருந்த வழிகாட்டிகள் (Guides) மிக அற்புதமாக ஒவ்வொரு இடத்தையும் அவர்கள் நாட்டின் வாழ்க்கை, பொருளாதாரம், பண்பாடுகள், வளர்ச்சி, தளர்ச்சி எல்லாவற்றை புரியும்படி எளிமையான ஆங்கிலத்தில் விளக்கிக் கொண்டே வந்தார்கள். அடுத்தத்தையும் அதை மொழி பெயர்த்து அனைவரும் புரிந்து கொள்ளும்படி கூறிக் கொண்டே வந்தார்கள். தங்குமிடம் (Hotel) உணவு எல்லாமே நன்றாக இருந்தது. palio diet மாதிரி vegetables fruits, milk tea coffee soup Bread jam, Honey, cheese, ~~butter~~ Butter milk, Chicken Mutton, Beef fish egg எல்லாமே இருந்தது. Fruit Juice உணவில் எந்த குறையும் இல்லை. அரிசி உணவு இல்லாமல் கொஞ்சம் தடுமாற்றம். ஒவ்வொரு நாளும் பார்க்க வேண்டிய இடங்களை விரைவாய் சென்று எதையும் miss பண்ணாமல் பார்த்தோம். நம் குழுத் தலைவர் ஆண்டு தோறும் செல்வதால் சென்ற முறை விட்டுப் போனதையும் பார்த்து விட வேண்டும் மக்கள் பார்த்துவிட வேண்டும் என்பதில் முனைப்பாய் செயல்பட்டார். சில சமயம் Guides நேரம் கருதி முடியாது என்றபோதிலும் அவர்களிடம் பரிந்து பேசி அதிகமான இடங்களைப் பார்க்க உதவினார்கள். முதலில் ஜோர்தான் சென்றோம். Nebo மலை, dead sea பார்த்தோம். மாதாவின் வீடு, கிணறு, சூசையப்பரின் தச்சுப் பட்டறை இயேசு பிறந்த இடம், கானாவூர் திருமணம் நடந்த இடம், மாதா பிறந்த இடம். அன்னம்மாள், சுவக்கின் வீடு Dormant மாதா. இப்படி எல்லா இடங்களையும் சுற்றிக் காட்டி விளக்கம் தந்தார்கள் கலிலேயக் கடல், ~~தாபோர்~~ திபேரியக் கடல், செங்கடல், மத்தியத் தரைக் கடல் எல்லாவற்றையும் பார்வையிட்டோம். கலிலேயக் கடலில் 2 மணி நேரம் Boating. ஜோர்தானில் திருமுழுக்குப் பெற்றோம். கெய்ரோவிற்கு சென்றோம். தாபோர் மலை, சீனாய் மலை ~~எகிப்தில்~~ ஒலிவ மலை, எகிப்தில் பிரமிடுகள், நைல் நதி. நைல் நதியில் 2 மணி நேரம் கப்பல் பயணம். மாலை பொழுது Evening 6.pm to 8.00pm. கப்பலில் கலை நிகழ்ச்சிகள் இரவு உணவு உண்டோம்.

இப்படியாக ஜோர்தான், இஸ்ரவேல், பாலஸ்தீனம், எகிப்து ஆகிய நாடுகளையும் (இரண்டு ஆசியாக் கண்டம், ஆப்ரிக்கா கண்டம், ஆசியாக் கண்டத்திலிருந்து எகிப்து சென்ற சூயஸ் கால்வாய் வழியாக ஆப்ரிக்க கண்டம் சென்று வந்தோம். ஒரே மலைகளும், பள்ளத்தாக்குகளும் குன்றுகளும் பாலைவனம், ஒலிவத் தோட்டம் பேரிச்சை மரங்கள், திராட்சைத் தோட்டங்கள் மிக வளமுடன் காணப்படுகிறது. தண்ணீர் பற்றாக்குறை என்றாலும் எங்கேயும் நாங்கள் தண்ணீருக்காய் ஏங்கவில்லை. அங்கு சொட்டு நீர் பாசனம் என்றாலும் வளம் கொழிக்கும் நாடுகளாய் மற்ற நாடுகளுக்கு காய்கறிகள், பழங்களை அனுப்பும் அளவிற்கு வளர்ந்துள்ளது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எங்கள் குழு ஒரு குடும்பத்தைப் போல் மிகுந்த அன்புடனும் ஒருவர், ஒருவருக்கு உதவியும் மகிழ்ச்சியாக 10 நாட்களையும் கழித்தோம். அந்த நாட்களில் இறைவன் ஒவ்வொருவருக்கும் உடல், உள்ள, ஆன்ம சுகம் தந்து பாதுகாத்துக் கொண்டார். அவரது சமுகம் எப்போதும் எங்களை சூழ்ந்து கொண்டது. போகும் போதும் காப்பேன், திரும்பும் போதும் காப்பேன் எப்போதும் காப்பேன் என்றவர் வாக்கு மாறாதவர் எப்போதும் உங்களோடு இருப்பேன், உங்களை எந்நாளும் கைவிடவும் மாட்டேன் விட்டு விலகவும் மாட்டேன். இஸ்ரவேலைக் காக்கிறவர் அயர்வதுமில்லை, உறங்குவதுமில்லை என்றவர் மாறாதவர். நன்றி சொல்லவே இவ்வளவு பெரிய வாய்ப்பை, அவர் பிறந்து, வளர்ந்து நடமாடிய அந்த பூமியின் கால்களும் நடக்கச் செய்த தேவனுக்கு எப்படி நன்றி சொல்வது

என்றே தெரியவில்லை.

இறைவன் என்றென்றும்
வாழ்த்தப் பெறுவாராக

வணக்கம்
நன்றி
அ. அன்புமொழி.

இயேசுவுக்கே புகழ்
இயேசுவுக்கே நன்றி
மரியே வாழ்க!